உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரணஸூ வைகாசி மீ உஉ (1944 மேமீ 15 திங்கட்கிழமை) [இல. கக

பயங்கரமான கொலையாம்

நள்ளிரவில் நடந்ததாகக் கூறப்படும் கோர சம்பவம்

நீதிதலத்தில் மகள் சொன்ன சாட்சியம்

சென்ற புதன்கிழமை இரவு 12 மணியளவில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பெருமாள்கோவில் வீதியில் இருக்கும் கதிரேசபிள்ளைக்குச் சொந்தமான காணியில் குடியிருக்கும் என். இளையகுட்டியின் மனைவியாகிய 56 வயது நிரம்பப்பெற்ற சின்னம்மா என்பவள் விலாவில் பட்ட அடியாலும் மர்மஸ்தானத்தில் பட்ட உதையாலும் உடனே மரணமானாளென்று தெரிகிறது.

யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர். ஜே. ஈ. அலெஸ் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச்சென்று சவத்தையும் சம்பவம் நடைபெற்ற இடத்தையும் பார்வையிட்டதன் மேல பிரேதப்பரிசோதனை செய்யும்படி அதிகாரிக்கு உத்தரவிட்டபின் யாழ்ப்பாணம் நீதிதலத்தில் விசாரணையை நடத்தினர்.

மகள் சாட்சியம்

விசாரணையில் கொலையுண்ட சின்னம்மாளின் இளைய மகளும் செல்லையா-இராசையாவின் மனைவியுமாகிய இருபது வயதுடைய யோகம்மா வென்பவள் கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:-

சென்ற இரவு நான் எனது வீட்டிலுள்ள அறையில் படுத்திருந்தேன். எனது தந்தையாரும் இப்பொழுது இறந்த தாயாரும் எனது மைத்துனியாகிய செல்லம்மாவும் அவளது பிள்ளைகளும் திண்ணையில் படுத்திருந்தார்கள். சரியாகப் பன்னிரண்டு மணியளவில் யாரோசிலர் எங்கள் வீட்டின் படலையின் முன்னின்று வீட்டுக்காரர் எனக் கூப்பிட்டார்கள். அப்போது எனது தாயார் இங்கு ஒருவருமில்லை எனச் சொல்ல, அவர்கள் போய்விட்டார்கள். அதன்பிறகு கால் மணி நேரத்துக்குப்பின் அவர்கள் மீண்டும்வந்து யார் வீட்டுக்காரர் எனக் கூப்பிட்டார்கள். அப்போது எனது வீட்டிலுள்ள ஒருவரும் பேசவில்லை. உடனே அவர்கள் வலுவில் படலையைத் திறந்துகொண்டு உள்ளே வந்து தூஷணையாகப் பேசிக்கொண்டு எனது தகப்பனருடன் சண்டை பிடித்தார்கள். நான் எழும்பி வாசலில் வந்து நின்று பார்த்தேன். அப்போது திண்ணையில் சண்முகமும் தர்மலிங்கமும் நிற்பதைக்கண்டேன். எனது தகப்பனாராகிய இளையகுட்டிக்குத் தர்மலிங்கம் முதன்முதல் கையினால் கழுத்தில் அடித்தார். அத்தருணத்தில் சண்முகம் பேசாதுநின்றார். அதன்பின் தர்மலிங்கம் இரும்புத் துண்டோ அல்லது பொல்லோ தெரியவில்லை ஒரு ஆயுதத்தினால் கையில் அடித்தார். தகப்பனாரும் தாயாரும் சத்தமிட்டார்கள். காணிச் சொந்தக்காரன் வீட்டுக்குப் போகும் படலைக்கு எனது தாயாராகிய சின்னம்மா பய மிருதியினால் கத்திக்கொண்டு ஓடினார். தர்மலிங்கம் துரத்திக்கொண்டு போய் அவளதுவாலையைப் பொத்திப் பிடித்தார். நான் கேட்டதற்கு முடிவு என்ன எனக்கேட்டார். அப்பால் சண்முகம் கீழ்த்தானத்தில் மிதிபடா என்று சொல்லிக்கொண்டு கிட்டப்போனார். தர்மு எனது தாயாரைக் கழுத்தில் பிடித்துக் கீழே தள்ள அவ மல்லாக்காகக் கீழேவிழுந்தார். வீழ்ந்ததும் சண்முகம் எனது தாயாரின் அடிவயிற்றில அதாவது மர்மஸ்தானத்தில் 3 தரம் மிதித்தார். அப்போது தர்மலிங்கம் விலாவில் 2தரம் உதைத்தார். அத்தருணத்தில் 'அம்மான்' என்னுமொருவர் அங்கு வந்தார். உடனே மூவரும் ஓடினர்கள். சம்பவம் நடக்கும்போது அம்மான் படலையடியில் நின்றார். இருவரும் முன்னுக்கு ஓட அம்மானும் பின்னுக்கு ஓடினர். அப்போது அவரது கையில் சாராயப் போத்தல் போன்ற ஓர் போத்தல் இருந்தது. சண்முகம் மிதிக்கும்போது எனது தாயார் சத்தம் போடவில்லை. கடந்த 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை தர்மலிங்கமும் வின்சர் தியேட்டரில் வேலைபார்க்கும் கொக்குவில் வாசியாகிய சரவணமுத்துவும் எனது வீட்டிற்கு வந்து எனது புருஷன் எங்கே எனக் கேட்டார்கள். நான் இங்கே இல்லை என்று சொன்னேன். பின்னர், வெற்றிலை பாக்குக் கேட்க நான் எனது மைத்துனமுறையான நாகராசாவிடம் வெற்றிலை பாக்குக் கொடுத்தனுப்பினேன். அவர்கள் வெற்றிலை போட்டுக்கொண்டு போய்விட்டார்கள். அதன்மேல் பெருமாள் கோவில் முன்னால் நடைபெற்ற காத்தவராயர் கூத்துப் பார்க்கப் போனபோதும் எனது தாயாரை எங்கே எனத் தர்மலிங்கம் விசாரித்தார். நான் ஏன் எனக் கேட்க ஒன்றும் பேசாது போய்விட்டார்கள். கடந்த 8ந் திகதி எனது தாயார் பெரிய கடைக்குப் போய்விட்டு வரும்போது சண்முகம் என் தாயாரைக் கூப்பிட்டுத் தர்மலிங்கம் உனது மகளின்மீது ஒருகண் வைத்திருக்கிறார். அதற்கு முடிவென்ன வெனக் கேட்க அவள் தனக்கு நேரமில்லை யெனச் சொல்லிவிட்டு வந்தாராம்.

அதன்மேல் ந. இளையகுட்டியும் இ. சின்னத்துரையும், சின்னத்துரை பெண் செல்லம்மாவும், இராமலிங்கம் நாகராசா என்ற பேரப்பிள்ளையும் சாட்சியம் கூறினர்கள்.

நீதிபதி தர்மலிங்கத்திற்கும் சண்முகத்திற்கும் விருந்து பிறப்பித்தார். விசாரணை வருகிற 19-ந் திகதி வரைத் தவணையிட்டார்.

சைவப் பிரசங்கங்கள்

7-5-1944ந் திகதி அராலி தெற்கு அகாயக் குளத்துப் பிள்ளையார் கோவிலில் "மகோற்சவப் பேறு" என்னும் விஷயத்தில், உடுவில் சிவஸ்ரீ த. ஐ முத்துச் சுவாமிக் குருக்களவர்களாலும், 9-5 1944ந் திகதி அராலி வடக்கு கடேசர்மடத்தில் "மனோலயம்" என்னும் விஷயத்தில் அராலி தெற்கு திரு. வே. கந்தையா அவர்களாலும் விரிவுரைகள் நடத்தப்பெற்றன. -கடிதம்.

காந்திஜி பற்றிக் கொம்மன்ஸில் கேள்வி

அவர் இன்னும் களைப் படைந்திருப்பதாக வைத்தியர்கள் அறிக்கை

'பூரண ஓய்வு வேண்டும்'

பம்பாய் மே 11—

இன்று மகாத்மா காந்தி பூனாவிலிருந்து பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்.

டாக்டர் ஸ்டேஷனில் ஜனத்திரளைத் தவிர்ப்பதற்காகக் காந்திஜீ பிரயாணம் செய்த புகைவண்டி புகைரதக் 'கேட்' டினருகிலேயே (லெவல் குராஸிங்) நின்றது.

காந்திஜி பிரயாணத்தை ஆயாசமின்றிக் கழித்ததுபோல் உற்சாகமாகவே காணப்பட்டார்.

பம்பாய்க்கு அருகிலுள்ள கடல் வாசஸ்தலமான ஜுஹுவிற்கு அவர் காரிற் சென்றார்.

காலை சரியாக 11—05 மணிக்கு காந்தி ஜுஹுவிலுள்ள வாசஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தார். 'ஜிஹாங்கிர் பட்டேல்' என்ற பெயருடைய இந்தப் பங்களா மிஸ்டர். சாந்திகுமார் மொரார்ஜியின் 'எஸ்டேட்டி'லிருக்கிறது. அந்த எஸ்டேட்டுக்கு 'ஸுதாபன' என்று பெயர் 'எஸ்டேட்' இருக்கும் பிராந்தியத்தின் பெயர் காந்திக் கிராமம்

"மீண்டும் சிறையில் தள்ளுவீரா?"

நேற்றுக் கொம்மன்ஸில் நடைபெற்ற விவாதத்தின்போது இந்திய மந்திரியிடம் காந்திஜி பற்றிக் கேட்கப்பட்ட மற்றும் கேள்விகள் பின்வருமாறு:—

தொழிற்கட்சியைச் சேர்ந்த திரு. டிங்கர்: காந்திஜி குணமடைந்தால் அவரை மீண்டும் சிறைக்குள் தள்ளுவது பற்றி மிஸ்டர். அமெரி யோசிப்பாரா?

மிஸ்டர். அமெரி:- சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த விஷயம் ஆலோசிக்கப்படும்.

மிஸ்டர். ஸோரென்ஸன்:- காந்திஜி வைஸ்ராயைக் காணப்போகிறார் என்று வந்த செய்திகளில் உண்மை இருக்கிறதா?

மிஸ்டர். அமெரி:-எனக்கு இன்னும் அதற்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

இந்திய - சீனத் தொடர்பு

ஸேர். ராதா கிருஷ்ணனுக்குச் சுங்கிங்கில் விருந்து

சுங்கிங் மே 11—

பிரசித்தி பெற்ற இந்திய தத்துவ சாஸ்திரியான ஸேர். எஸ். ராதா கிருஷ்ணன் இப்போது சீனாவுக்கு விஜயஞ்செய்திருக்கிறார். சீன இந்திய சங்கத்தில் அவருக்கு இன்று மாலை விருந்தளிக்கப்பட்டது.

சங்கத்தின் டைரக்டர் சபையின் தலைவரான டாக்டர் ஹுசியான் மியான் பேசுகையில் ஸேர். ராதா கிருஷ்ணன் இந்திய கலாசாரத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் அறிவு மகத்தான தென்றும் ஆர்ந்த கலாசாரம் மீண்டும் சீனாவுக் குட்புக ஆரம்பித்திருக்கும் தருணத்தில தான் அவர் இங்கு வந்திருப்பதாகவும், இரு நாட்டு மக்களுக்கும் நெடுங் காலமாக நட்பிருந்து வருவதாகவும் கூறினார்.

நமது கலாசாரங்கள் இரண்டும் செழித்தோங்கியிருந்த பழைய காலத்தில் நமது நட்பும் ஆழமாக இருந்தன. மனித சமூக சந்தோஷத்தை அனுபவித்த காலங்களுள் அந்தக் காலமும் ஒன்றாகவே இருந்தது. சரித்திர சம்பந்தமான இந்தப் பிணைப்பை நாம் கொண்டாடுவோமாக.

5-வது சேனை முன்னேறுகிறது

ஐரோப்பாமீது மீண்டும் பிரமாண்டமான விமானத் தாக்குதல்

லண்டன், மே 12—

இத்தாலியிலுள்ள நேசதேச இராணுவத் தளத்திலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:-

இத்தாலியில் நேசதேசப் படைகள் பிரமாண்டமான அளவில் ஒரு புதிய வலுத்தாக்குதலை ஆரம்பித்திருக்கின்றன. பிரதான இத்தாலிய அரங்கத்திற் பலத்த பீரங்கிப் பிரயோகத்திற்குப் பிறகு இந்த வலுத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது.

8-வது சேனை இரகசியமாக அப்பினைன்ஸைக் கடந்து தாக்கித் தகர்த்துக்கொண்டு லிரி கணவாய்க்குச் செல்ல முயற்சிக்கிறது. 5-வது சேனை டைரீனியன் கடற்கரைப் பிராந்தியத்தில் வடமேற்கு நோக்கி முன்னேறுகிறது.

புதிய வலுத்தாக்குதலைப் பற்றி ஜெனரல் அலெக்ஸாண்டர் வெளியிட்ட விசேஷ அறிக்கை பின்வருமாறு:—

"இத்தாலியிலுள்ள நேச தேசப் படைகளை ஒன்று திரட்டும் வேலை சத்துருவின் தலையீடு கொஞ்சமும் இன்றி வெற்றிகரமாகப் பூர்த்தியாகிவிட்டது. யுத்த அரங்கம் முழுவதிலும் போக்குப்படைகளும் விமானங்களும் சுறுசுறுப்பாக இருந்தன. நமது இரகசிய நடவடிக்கைகளைச் சத்துரு அறிந்து கொள்ளாமற் பாதுகாப்பாக இருந்தன. தளவாடங்களையும் ஆட்களையும் ஒன்று சேர்க்கும் வேலை மிகக் கஷ்டத்தோடு நடைபெற்றது. படைகளை ஒன்று திரட்டும் வேலை மெதுவாகவே நடைபெற்றது.

இந்த நடவடிக்கைகளில் எல்லாப் படைப் பிரிவுகளும் ஈடுபட்டன. காலநிலை சீராக இருந்து நிலம் பொருத்தமுற்றதாக இருந்தும்படைகளை ஒன்று திரட்டும்வேலை சரியான நேரத்தில் பூர்த்தியடைந்துவிட்டது.

5-வது சேனையும் 8 வது சேனையும் ஜெனரல் அலெக்ஸாண்டரின் தலைமையில் மத்தியதரைக் கடற்பிராந்தியத்திலிருக்கும் நேச தேச விமானப் படையின் உதவியுடன் நேற்று கடாவ்வரிசையைத்தாக்க ஆரம்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழக தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹூ
வைகாசிமீ ௨ஷ திங்கட்கிழமை

உடுபுடைவைப் பஞ்சம்

மக்களாயுள்ளார் நெல்அரிசி கிடையாவிட்டால் கோதுமை, யரிசி, மா, குரக்கன், வாரதினை, சாமை, மரவள்ளிக் கிழங்கு முதலிய உணவுப் பொருள்களை உண்டு தங்கள் ஆருயிர் உடம்பைவிட்டுப் பிரியாமற் பாதுகாத்துக் கொள்ளுதல் ஒருவாறு இயலும். இவைகள் தாம் அகப்படாத பட்சத்திலும் ஒருநாள் இருநாள் வெறுந் தண்ணீரைக் குடித்து உபவாசமிருந்துங் காலம் போக்கலாம். ஆனால் மனுஷ வர்க்கத்தினர் பெண்ணாக, ஆணாக தங்கள் மானத்தைக் காப்பதற்காகிய உடையில்லாமற் கணப்பொழுதாயினும் இருக்க முடியுமா? பட்டுப் புடைவை வேண்டாம்; பருத்திப் புடைவைக்குத்தானும் பஞ்சம் வருமானால் செய்வதென்ன; ஆதி மக்கள்போல இலைகளைத் தைத்து உடுப்பதா? மரவுரியை யணிவதா? மான்றோலைத் தரிப்பதா? புலித்தோலைப் புனைவதா?

சிலகாலமாக உடுபுடைவையின் விலையேறியேறி இப்பொழுது மக்கள் வாங்கி உடுக்க முடியாத நிலைமைக்கு அணித்தாக விலையுயர்ந்துகொண்டது. அந்தநாளில் 1 யார் எட்டுப் பத்துச்சதவிகிதம் விலைப்பட்ட "காரிகன" துணி இப்பொழுது யார் இரண்டு ரூபாவாக விலைப்படுகின்றதாமே? இங்குள்ள புடைவைக் கடைகளெல்லாம் பெரும்பான்மையும் வெறுங்கடைகளாகக் காணப்படுகின்றன; புடைவை வியாபாரிமாரைக் கடையிற் போய் இன்ன புடைவை யுண்டோ என்று கேட்டால், வியாபார முறைப்படி இல்லையென்று சொல்லாமல், இன்று வரும் நாளைவரும், நாளைநின்று அடுத்தநாள் வரவிருக்கிறது என்று இப்படிக் காரணங் காட்டிக் கொண்டிருக்கிறார்களேயல்லாமற் புடைவையை அதிக விலைக்குத்தானும் விற்பதற்கு வகையறியாது கஷ்டப்படுகிறார்கள். இப்படியிருந்தால் இனிமேல் நடப்பதென்ன? எங்கள் அதிகாரிகள் இறைக்குப் பயாசங்கட்டுமுன்னைப் புடைவை விலைக் கட்டுப்பாடு செய்தார்களே, அதனால் வந்த பயனென்ன? இந்த நாட்டிற்குப் புடைவை வந்து விலைப்படாவிட்டால், அந்த விலைக்கு ஒரு கட்டுப்பாடு செய்ய முடியுமோ; வேறுவழிகள் முழுமுடியா?

உணவு விஷயமாக, பிறநாடுகளிலிருந்து இங்கு உணவுப் பொருள் வருதல் அரிதாக,

"இங்கே காட்டைவெட்டிநாடாக்கி, நாட்டை வயலாக்கி உணவுப்பொருளை விருத்திசெய்தற்காகிய முயற்சிகள் பண்ணப்படுகின்றன; பள்ளிக்கூடங்களின் கொல்லைப்புறங்களிலெல்லாம் காய்கனிக்குரிய பயிர்கள் செய்கைபண்ணப் படுகின்றன, மரவள்ளி நடப்பட்டிருக்கிறது; இனி எமக்கென்ன குறை" என்று எவரும் மெச்சப் பேசினார்கள் அதிகாரிகள். இப்பொழுது உடுக்குந் துணிக்குக் கஷ்டம்நேர்ந்தபோது இவ் வதிகாரிகள் என்ன சொல்லவிருக்கிறார்கள்? என்ன செய்ய இருக்கிறார்கள்? இனித்தான் வனங்களைக் காட்டைப் பண்படுத்திப் பருத்திச்செடியை விருத்திபண்ணிப் பஞ்செடுத்து நூல் நூற்றுப் புடைவையாக்கிச் சனங்களுக்கு உதவப்போகிறார்களா? இலைமேல் பருத்தி உடனாகுடன் புடைவையாகக் காய்க்குமா?

எந்த அபாயத்தையும் வருமுன் காப்பதற்கு முயலவேண்டுமேயொழிய வந்தபின் காக்க முயன்று அல்லற்படுவதனால் ஆவதொன்றுமில்லையாம். "வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகோலி வையார் பெருகுதற்கண் என்செய்வார் பேசு" என்றார் எங்கள் பெரியோர். எங்கள் அரசாங்க சபைப் பிரதிநிதிகள், அவர்களுக்கு மேலே யாரும் அதிகாரிகளிருந்தால் அவ்வதிகாரிகளாக நகரசங்கம் பட்டினசங்கம் கிராமச்சங்கங்களிலுள்ள பிரதிநிதிகள், இன்னும் இந்த நாட்டிலுள்ள மக்களின் மானத்தைக் காக்கவிரும்பும் அபிமானிகளெவர்களோ அவர்கள் ஆகிய எல்லாரும் மானத்தைக் கெடுக்கக்கூடிய துணிப்பஞ்சம் இந்நாட்டு மக்களை வந்து பீடித்து வருத்தவொட்டாது தடுத்தற்காகிய வழிவகைகளைக் காலதாமசமின்றி நன்கு யோசித்துச் செய்தல் வேண்டும்.

திரு. இராஜகோபாலாச்சாரியார்போன்ற இந்திய தலைவர்கள் இங்கே வந்தபோது இந்த இலங்கையிற் பெரியார் அபிமானிகளென்றிருப்பவர்கள் இலங்கைக்குச் சுயாதீனம் வேண்டும், இலங்கையிருக்கும் இந்தியர்களுக்கும் ஒற்றுமையை ஆக்கவேண்டுமென்ற எத்தனையோ விஷயங்களை அந்த இந்தியத் தலைவரோடு கலந்து பேசினார்கள். அப்படிப்பட்ட விவகாரங்களையிட்டு இவர்கள் அவரோடு கலந்து பேசியதையும் யோசித்ததையும் பற்றி நாம் குறைசொல்ல வரவில்லை. "உங்களூரிலிருந்து எங்களுக்கு அரிசி நெல் உதவச்செய்ய வேண்டும். புடைவை முன்னர்ப்போல அங்கிருந்து இங்கு உதவச்செய்ய வேண்டும்" என்று அந்தப் பெரியாரைக் கேட்க மறந்துவிட்டார்களே. இவர்கள் கேட்டிருந்தால் அவரும் தம்மால் இயன்றதைச் செய்யப்பார்ப்பாரே. நம்நாட்டுமக்களுக்கு இன்றியமையாதனவற்றைத் தேடிக் கொடுக்க வழிபார்க்கவேண்டும்; இல்லையேல் சனப்பிரதிநிதிகளென்றும் அதிகாரிகளென்றும் அபிமானிகளென்றும் இருந்து பயனென்ன? சொல்லல்?

இலக்கியப் பகுதி:

பரணிப் பிரபந்தம்

[க. கி. ந.]

IX

இனி, தக்கயாகப் பரணிக்கும் கலிங்கத்துப் பரணிக்கு மிடையே காணப்படும் சில வேறுபாடுகளை நோக்குவாம்.

முதற்கண் கடவுள் வாழ்த்திலேயே வேற்றுமையுண்டு.

"புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்
தொழில்காட்டப் புவன வாழ்க்கைச்
செயல்வண்ண நிலைநிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தை செய்வாம்
அருமறையின் நெறிகாட்ட அயன்பயந்த
நிலமகளை யண்டங் காக்கும்
உரிமையினிற் கைப்பிடித்த உபயகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே"

எனக் கலிங்கத்துப் பரணிக் கடவுள் வாழ்த்து அப்பரணியின் பாட்டுடைத் தலைவனாகிய அபயன் வாழ்கவென்று வாழ்த்துக் கூறுகின்றது. ஆயின், தக்கயாகப்பரணிக் கடவுள் வாழ்த்தாகிய

"புயல்வாழ நெடிதூழி புவிவாழ முதலீறு
புகல் வேதநூ
லியல்வாழ வுமைவாழ்வ தொரு பாக ரிருதாளின்
இசை பாடுவாம்
குலநேமி ரவிபோல வலநேமி தனிகோலு
குலதீபனே
நிலநேமி பொலனேமி யளவாக உககோடி
நெடிதாளவே"

என்னும் இது, பாட்டுடைத் தலைவனுக்கு வாழ்த்துக்கூறுமல், அப்பரணியை ஆக்குவித்தோனாகிய இராசராச சோழனுக்கு நன்மையுண்டாகவேண்டுமென்று வாழ்த்துக் கூறுகின்றது. இவ்வாறே இவ்விருநூல்களிலுமுள்ள கடவுள் வாழ்த்தின்கண் வரும் ஏனைய செய்யுள்களையும் படித்து இவ்வுண்மையை அறிந்து கொள்க.

2. இன்னும் கலிங்கத்துப்பரணியில் உமாபதி, திருமால், நான்முகன், சூரியன், கணபதி, முருகவேள், நாமகள், துர்க்கை, சத்தமாதர்கள் ஆகியோரைச் சயங்கொண்டார் வாழ்த்தியிருக்கின்றார். அதனோடு அறுவகை வாழ்த்தும் பாடியிருக்கின்றார். அஃதாவது முனிவரையும், பசுவையும், பார்ப்பாரையும், அரசரையும் மழையையும், நாட்டையும் வாழ்த்துதலாம். இவற்றுட் சில குறைந்தவரினும் அப்பெயர் பெறும். தொல்காப்பியம் செய்யுளியலில் வரும் 109ம் சூத்திரத்திற்குப் பேராசிரியர் எழுதியுள்ள உரைநோக்கிக் கண்டு கொள்க. இதனை நச்சினார்க்கினியர் "அறுமுறை வாழ்த்து" என்பர்.

ஆயின, தக்கயாகப் பரணியிலோ ஒட்டக்கூத்தர் உமாபாகர், விநாயகர், முருகக் கடவுள், திருஞானசம்பந்தரென்னும், இவர்களை மாத்திரமே வாழ்த்தியமைகின்றார்.

கடவுள் வாழ்த்தின கண்ணே இந்த இருபெரிய வேற்றுமைகளும் அவதானிக்கக்கூடியனவாக இருக்கின்றன.

3. இனி, நூலுறுப்புக்களிலும் இவ்விரு நூல்களுக்குமிடையே சிறிது வேற்றுமையுண்டு.

கலிங்கத்துப் பரணியின்கண்ணே கடவுள் வாழ்த்துக்குப் புறம்பாகக் காப்பென ஒன்று பிரத்தியேகமாக இல்லை. ஆயின், தக்கயாகப் பரணியிலோ காப்பு என ஒன்று தனியாக முதற்கண் வைரவக்கடவுள்மீது பாடப்பெற்றிருத்தலைக் காணலாம். அதுவேயுமன்றி, கலிங்கத்துப்பரணியின்கண்ணே 13 உறுப்புக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன. 1 கடவுள் வாழ்த்து 2 கடைதிறப்பு, 3 காடு பாடியது, 4 கோயில் பாடியது, 5 தேவியைப்பாடியது, 6 பேய்களைப் பாடியது, 7 இந்திரசாலம், 8 இராசபாரம்பரியம், 9 பேய்முறைப்பாடு 10 அவதாரம், 11 காளிக்குக் கூளி கூறியது, 12 களங்காட்டியது, 13 கூழடுதல் என்னும் இவைபாம்.

தக்கயாகப் பரணியிலோ பதினோர் உறுப்புக்களே அமைந்துள்ளன, அவையாவன: 1 கடவுள் வாழ்த்து 2 கடைதிறப்பு 3 காடு பாடியது 4 தேவியைப்பாடியது 5 பேய்களைப் பாடியது 6 கோயிலைப்பாடியது 7 பேய் முறைப்பாடு 8 காளிக்குக்கூளி கூறியது 9 கூழடுதலும் இடுதலும் 10 களங்காட்டல 11 வாழ்த்து என்னுமிவையாம.

வாழ்த்து என ஓர் உறுப்புத் தக்கயாகப்பரணியில் ஈற்றிலும உள்ளது. அது பதினைந்து தாழிசைகளைக் கொண்டது. ஆயின், கலிங்கத்துப்பரணியிலோ வாழ்த்து என ஓர் உறுப்பு ஈற்றில இல்லை. ஒரு செய்யுளால மாத்திரம ஆசிரியர்

"பாவ ருங்களி சிறக்க வேதருமம்
எங்கும என்றுமுள தாகவே
தேவ ரின்னருள் தழைக்க வேமுனிவர்
செய்த வப்பயன் விளைக்கவே
வேதநன்னெறி பரக்க வேயபயன்
வென்ற வெங்கலி கரக்கவே
ேடோத ரும்புகழ் பரக்க வேபுவி
நிலைக்க வேபுயல் சுரக்கவே"

என ஒரு வாழ்த்துக் கூறியமைகின்றார். ஏனைய உறுப்புக்களில், இந்திரசாலம், இராசபாரம்பரியம், அவதாரம் என்னும் உறுப்புக்கள தக்கயாகப்பரணியில் இல்லை. அன்றியும், இவ்விரண்டு நூல்களிலும் ஒருங்கே காணப்படும உறுப்புக்களிற்றானும் அவ்வுறுப்புக்களின் வைப்புமுறையில் இருநூல்களுக்குமிடையே சிறிது பிறழ்ச்சி உண்டு. அதனை நூல்நோக்கிக் கண்டுகொள்க.

4 இவ்விரண்டு நூல்களுக்குமிடையேயுள்ள மற்றொரு வேறுபாடு ஒட்டக்கூத்தர் வடநூன்முறை தழுவிச்செய்யுட்கருத்துக்களை அமைத்தாராக, சயங்கொண்டார் அங்ஙனஞ் செய்திலர். காடுபாடியது முதலிய உறுப்புக்களில் ஒட்டக்கூத்தர் யாமளநூலின் முறைப்படி வருணித்துளளார் என்ப.

5 ஒட்டக்கூத்தர் சைவத்தின் ஏற்றம்புலப்படப் பாடும் இயல்பினர். உதாரணமாகத் திருஞானசம்பந்தர் சைனரை வென்றகதையைத் தேவிக்கு நாமகள் கூறியதாகக் கோயிலைப் பாடியது என்னும் உறுப்பின் கண்ணே அமைத்துக் கூறுதலைக் காணலாம். அன்றியும், கடவுள் வாழ்த்தின்கண்,

"வழுவேறு குடகூடல் வடவாறு வழிமாற
மணலாலொரோர்
கழுவேறு மமண்மூகர் கருமாள வருமீளி கழல்பாடுவாம்"

எனத் திருஞான சம்பந்தசுவாமிகளை வாழ்த்துமிடத்தும் சமணத்தைப் பழித்துச் சைவத்தின் உயர்வு தோன்றப் பாடுதலைக் காண்க. இத்தகைய சமய ஏற்றங் கூறும் பாட்டுக்களைச் சயங்கொண்டார் பாடிற்றிலர்.

6 கூழடுதலும் இடுதலும் என்னும் உறுப்பின்கண்ணே, பேய்கள் கூழையாக்குதலையும் தம்முள்ளே பகிர்ந்து குடித்தலையும் இரு நூல்களிலுங் காணகின்றோம். ஆயின், கலிங்கத்துப்பரணியில வருங் கூழடுதல் என்னும உறுப்பில், கூழை அட்டு உண்ட பேய்கள், பாட்டுடைத்தலைவனாகிய விசயதரனை வாழ்த்தின என்று புலவர் கூறுகின்றார்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாள உலகம்

[வெள்ளவத்தை மு. இராமலிங்கம் எழுதுவது]

“வேதாள உலகம்” என்ற தலையங்கத்தைக் கண்டவுடன் மயங்கிவிடாதீர்கள். இஃது சென்னை முவ்பகதூர் P. சம்பந்த முதலியார் அவர்களால் எழுதப்பட்ட ஒரு நாடகத்தின் பெயர். பிரபல சினிமா நடிகை ஸ்ரீமதி. S. D. சுப்புலக்ஷ்மி அவர்கள் தம்குரு (ஸ்ரீமான் பாபநாசம் சிவன்) வுடன் ஒரு படத்திலாவது கதாநாயகியாகத் தோற்ற வேண்டும் என விருப்புற்றதால் ஏற்பட்டதாம் “பக்த குசேலா” என்னும் படம். அதுபோலவே சம்பந்தமுதலியாரவர்கள் தாம் எழுதும் ஒரு நாடகத்திலாவது (61 நாடகங்கள் எழுதியுள்ளார்) தோன்ற வயிறுள்ள தம நண்பர் ஒருவர் (பெயர் தெரியவில்லை) கதாநாயகராகத் தோற்றவேண்டுமென விருப்புற்றதால் ஏற்பட்டதாம் “வேதாள உலகம்” என்னும் இந்நாடகமென அறிகிறோம். இந்நாடகத்தில் வரும் தத்தன் என்னும் பாத்திரமே நாடகாசிரியரின் நண்பர் நடித்ததாகுமாகும்.

கதைச்சுருக்கம்

மச்சதேசத்து இராஜகுமாரனுகிய ராஜசிம்ஹனும் அவன் தோழனுகிய தத்தனும் அரண்மனையைத் தாதியிடமிருந்து கௌரி பூஜைக்காக கொண்டுபோன பழங்களைக் கவர்ந்துகொள்ளல், இராணியாகிய குமுதசுந்தரி வந்து அவர்களைக் கடிந்துகொள்ளுதல். அரண்மனையிலிருக்கும் ஓர் அந்தரங்கமான அறையின் சாவியை மகாராணியிடமிருந்து திருட்டுத்தனமாய்த் தத்தன் எடுத்துக்கொள்ளல்.

இராஜகுமாரன் அந்த அந்தரங்கமான அறையைத் திறந்து அதகு வரைந்திருக்கப்பட்ட ஓர் பெண்ணின் சித்திரத்தைக்கண்டு மனம் மயங்குதல். குமுதசுந்தரி வந்து கௌரியை நோக்கிப்பதினுறுவருடங்களுக்குமுன் வேதாள உலகம் சென்ற தனது பத்தாவின் வரவிற்காகப் பிரார்த்தனை செய்தல். ஒரு வருடத்திற்குள் தன் பிதாவை மீட்டுக்கொண்டு வருவதாக இராஜகுமாரன் சபதஞ்செய்தல். குமுதசுந்தரி தன் மகன் மிகச் சிறியவன் எனறு அஞ்சித் தடுத்தல். இராஜகுமாரன் தன் வாக்கை வற்புறுத்தி வேதாளஉலகம் போகத் தீர்மானித்தல்.

வேதாள உலகத்திற்குச் செல்லும்பொழுது நடுக்காட்டில் தத்தன் தனக்குச் சாப்பாடு கொடுக்கும்படி இராஜகுமாரனைத் தொந்தரவு செய்தல். பாதங்கன் என்னும்மோர் மகானிடமிருந்து வேதாள உலகம் போய்ச்சேருவதற்கு வேண்டிய ஓர் மந்திரத்தை அறிந்து செல்லல்.

ஓர் குகைக்கருகில் சென்றதும் இராஜகுமாரன் மந்திரத்தைச் சொல்லிக் குகைவாசலில் மயங்கி விழுதல். குகை வெடிக்க மாத்திரைக் கோலக் கையிலேந்திய இராஜீவி என்னும் வேதாள உலகத்து மங்கை வெளிவந்து இராஜகுமாரனின் வடிவழகைக்கண்டு மோசி அவனை எழுப்ப அவன் விருத்தாந்தங்களைக் கேட்டு தனது தந்தையிடம் அழைத்துச்செல்லல். தத்தன் மயங்கி விழுதல். வேதாளங்கள் கையில் தத்தன் அகப்படுதல். தன் வாய்ச் சமயோசிதத்தால் வேதாளங்கள் மீது ஏறிச் சவாரிசெய்து கொண்டு போதல்.

இராஜகுமாரன் மீது கொண்ட காதலால் இராஜீவி வருந்துதல். வேதாள உலகத்துமன்னனுகிய வீரமார்த்தாண்டனும் அவனது காவலே உருவெடுத்து வந்த அவன் மனைவி கோமதியும் அவன் புத்திரி மோகனவல்லியும் வந்து இராஜகுமாரனின் வரலாறறை அறிதல். இராஜகுமாரன் வேண்டிவந்த காரியங் கைகூடுவது அசாத்தியமென்றும் ஆதலால் தன்நகர்போய்ச் சேரும்படியும் வீரமார்த்தாண்டன் சொல்ல இராஜகுமாரன் தான் அதை முடிக்காவிட்டால் இறக்கச் சித்தமாயிருப்பதாகச் சொல்லுதல். வேதாளங்கள் தத்தனைத் சுமந்துகொண்டு வருதல். தத்தன் வேடிக்கையாக வார்த்தையாட வீரமார்த்தாண்டன் அவனுக்கு மூன்று கட்டளைகள் கொடுப்பதாகக்கூறிச் செல்லுதல். கோமதி தன் மகளுக்கு இராஜகுமாரனை விவாகஞ்செய்யத் தீர்மானித்து அவனுக்குத் தேறுதல் கூறிச்செல்லல்.

இராஜகுமாரனுக்கும் தத்தனுக்கும் வீரமார்த்தாண்டன் முதலாங் கட்டளை கொடுத்தல். இராஜீவிதன் சாமர்த்தியத்தால் மோகன வல்லியிடமிருந்து அறிந்துகொண்ட சூழ்ச்சியை இராஜகுமாரனுக்குத் தெரிவித்து அக்கட்டளையை நிறைவேற்றல். தத்தன் திருட்டுத்தனமாக வேதாளங்களை வெருட்டி அவைகளைக் கொண்டு தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றல்.

இரண்டாவது கட்டளையாகக் குகைக்குள் இராஜகுமாரனையும் தத்தனையும் அடைத்திருத்தல். மறுபடியும் இராஜீவி மோகனவல்லியை ஏமாற்றி இருவரையும் வெளிவரச் செய்தல். திருட்டுத்தன முடைய தத்தன் மோகனவல்லியையும் காவலாகவந்த வேதாளங்களையும் குகைக்குள் வைத்து அடைத்தல். வீரமார்த்தாண்டன் வந்து நடந்த சமாசாரத்தை அறிந்து அவமானத்துடன் செல்லல்.

மூன்றாவது கட்டளையை நிறைவேற இராஜகுமாரன் தன்னைத் தானே பலிகொடுக்கத் தீர்மானித்தல். இராஜீவி அவ்விடம் வந்து தன் மெய்க்காதலைக்கூறித் தன்னைப் பலிகொடுக்கும்படி கேட்டல். இதையறிந்த தத்தன் தன்னைப் பலிகொடுக்கும்படி வாதாடுதல். இராஜகுமாரன் தன்னைப் பலி கொடுக்கும்படி வீரமார்த்தாண்டனிடம் கூறித் தான் சாகுமுன் தனபிதாவைச் சிலையாகவாவது பார்க்கவேண்டுமென்று கேட்க அச்சிலை தோற்றல். இராஜகுமாரன் தன் கழுத்தை வெட்டஓங்கிய கத்தியைச் சிலை உயிர்கொண்டு தடுத்தல். வீரமார்த்தாண்டனுடைய சாபம் நீங்கல். குமுதசுந்தரியை அழைத்தல். இராஜகுமாரனுக்கும் இராஜீவிக்கும் விவாகம்.

சரஸ்வதிவிலாச சபையார் நடித்த வரலாறு

இந்நாடகத்தை இலங்கையில் முதன்முதல் நடித்துக் காட்டிய பெருமை யாழ்ப்பாணம் சரஸ்வதி விலாச சபையாருக்கே உரியது. அவர்கள் இதனை 1915-ம் ஆண்டு யாழ்ப்பாணம் டிக்சன் மண்டபத்தில் நடித்தனர். அந்நாடகத்தில் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை தத்தன்; வித்துவான் க. இராமலிங்கம் ராஜசிம்மன், ஸ்ரீமான் C. ஆறுமுகதாசன் ராஜீவி, காலஞ்சென்ற ஸ்ரீமான் V. M. கிருஷ்ணசுவாமி மோகனவல்லி, ஸ்ரீமான். C. நடராஜா வீரமார்த்தாண்டன், ஸ்ரீமான் மு. சபாரத்தினசிங்கி சுகவர்மன், காலஞ்சென்ற ஸ்ரீமான் C. W. சின்னப்பாபிள்ளை பாதங்கன், ஸ்ரீமான். T. பொன்னையா உபாத்தியாயர் குமுதசுந்தரி, ஸ்ரீமான். S. செல்லையா கோமதி, வேதாளங்களை ஸ்ரீமான்கள். S. சபாரத்தினம், காலஞ்சென்ற M. S. முத்துக்குமாரு, ஸ்ரீமான்கள M. S. [illegible] C. M. பெருமை[illegible] முதலியோர்களும் இந்நாடகம் ஏழு அல்லது எட்டு முறைகள் சரஸ்வதிவிலாச சபையாரால் நடிக்கப்பட்டது. கடைசியாக 1934-ம் ஆண்டு நடிக்கப்பட்டது. அத்தருணங்களில் காலஞ்சென்ற ஸ்ரீமான்கள் S. சபாபதிப்பிள்ளை, V. நமலிங்க உபாத்தியாயர், C. இராசநாயகமுதலியார் அவர்களும் மற்றும் ஸ்ரீமான்கள் T. தம்பப்பிள்ளை உபாத்தியாயர், M. S. முத்துக்குமாரு, R. ரங்கநாதன், S. S. பொன்னையா, S. சிவஞானம், A. K. சுப்பிரமணியம், G. வீரவாகு, பிரம்மஸ்ரீ S. சுப்பிரமணியஐயர் முதலானோர் மற்றும் கலந்தும் இந்நாடகத்தை நடித்துள்ளார்கள்.

நாடகாசிரியரைக்கொண்ட சுகுணவிலாச சபை

1916-ம் ஆண்டு மே மாசம் 16-ந் தேதி இந்நாடகநூலாசிரியரைப் பிரதம நடிகராகக் கொண்டுள்ள அவர்கள் எழுதியுள்ள துணைமேயென்பதை யான் எனது அனுபவத்திற் கண்டுள்ளேன். சைவர்கள் நரகுமுதலைப் பிற செய்யவிடார் [illegible] செய்யார்கள். இது

தொடர்ச்சி 4-ம் பக்கம்

எனது சமயகுரு

(திருமயிலை: திரு. சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் சைவமகாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு)

சிவநேயச் செல்வர்களே!

உங்களுடைய சபைக் காரியதரிசி என்னை ஓர் விடயத்தைப்பற்றிப் பேசும்படி பணித்தனர். அக்கட்டளையின்படி யான் பேசப்புகும் விஷயம் “எனது சமயகுரு” என்பதாகும். என்னுடைய சமய குருவைப்பற்றி யான் இங்கே தங்கள் மகாநாட்டில் பேசப் புகுவது தங்களுக்கு வியப்பைத் தரலாம். ஆனால் அதனைப் பொருத்த முடையதாகவே தாங்கள் பின்னர்க் காண்பீர்கள்.

யான் ஓர் சைவ குடும்பத்தைச் சேர்ந்தவன். எங்கள் வீட்டில் சிறுவர்களுக்கு இளமையிலேயே பாலபாடங்கள், சிவாலய தரிசனவிதி, பெரியபுராணவசனம், திருவிளையாடற்புராண வசனம், கந்தபுராண வசனம், சைவவினுவிடைகள் முதலிய நூல்களைப் படிப்பிப்பது வழக்கம். இவ்வழக்கத்தின்படி யானும் இந்நூல்களை படித்ததனால் எனக்குச் சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் சிறுவயதிலே உண்டாயின. பின்னர் அந் நூலாசிரியராகிய நாவலரிடத்து மதிப்புண்டாகி அம்மதிப்பு மேன்மேலும் வளர்ந்து அவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்திய மற்ற நூல்களையும் தேடிப் படிக்கும்படி தூண்டியது. சைவசித்தாந்த சாத்திர உண்மைகளை அறிய ஏதுவாயிருந்தவை பெரியபுராண சூசனம் கோயிற்புராணவுரை, சைவசமய நெறியுரை முதலியனவாம். என்னை அறியாமலே எனக்கு நாவலர்மீது அன்புண்டாயது. இவ்வன்பினுல் அழுத்தப்பட்டவனாய் யான் அவர்கள் சரித்திரங்களை வாங்கிப் படித்தேன். பிறகு அவர்கள் பிரபந்தத் திரட்டு முதலிய நூல்களையும் வாங்கிப் படிக்கலானேன். அவர்கள் இரண்டாஞ் சைவவினுவிடையைப் பத்துத்தரம் யான் தீக்ஷை, சிவபூசை முதலியவற்றின் ஆவசியகத்தை அறிந்தேன், என்னிடத்தே சைவப்பற்றை உண்டாக்கியவர் அவரேயாகையால் அவரைச் சமயகுருவாகக் கொண்டு அவரை எப்பொழுதும் பூசித்து வருகின்றேன். அவர் குரு பூசையை யான் பலவருடங்களாகக் கொண்டாடிவருவதுண்டு.

அவர்கள் புரிந்த சைவத் தொண்டிற்கு அக்காலத்தில் சைவர்களாலேயே இடையூறு நேர்ந்ததாக சைவபரிபாலனத்திற்கு ஏற்பட்ட பிணிபோலும்.

நாவலரவர்களின் தருமங்கள் அவர்கள் மனப்பாங்கின்படி நடக்கும்படி செய்வதே யாம் அவர்களைப் போற்றியவாறுகும். சிதம்பரத்திலுள்ள அவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையைப் பழைய முறைக்குக் கொண்டுவர வேண்டியது சைவர்களாகிய எமக்குக் கடனென்பதை வற்புறுத்துகின்றேன். 60 ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் தனியாகச் செய்த அருங் காரியங்களை நோக்க யாம் பலபேர் கூடி இக் குறையை நீக்க வழிதேடுவது சிரமமன்று.

யான் நாவலரவர்களிடத்துக் கொண்டஅன்பே அவர்களது வழி மாணவராகிய கொக்குவில் ச. சபாரத்தின முதலியார், த. கைலாசபிள்ளை, புலோலி சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, முதலியவர்களோடு தொடர்புண்டாக்கிய தெனலாம்.

நாவலர் சென்னையில் சிலகாலம் வசித்திருந்தபோது தமது இல்லத்தில் சைவப்பிரசங்கம் வாரந்தோறும் நிகழ்த்தியதாகவும் அப்பிரசங்கத்திற்குப் பல தமிழ்ப் பண்டிதர்களும் குழுமிக் கேட்டு மகிழ்ந்ததாகவும் எனது தமிழாசிரியர் வித்துவான் சண்முகம்பிள்ளையவர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். பிரசங்கத்திற்கு விஜயஞ்செய்வோர் முறைப்படி போக வேண்டுமாம். அப்படிப் போகாதவர்கள் விலக்கப்படுவார்களாம்.

கந்தபுராணத்தை முதன்முதல் அச்சிட்டுதவிய பேருபகாரி நாவலரே. அப்பதிப்பு வெளிவருமுன்னர் அங்குள்ள தமிழ்ப்பண்டிதர்கள் பலருக்குக் கந்தபுராணச் சுவை தெரியாது. அவர்களெல்லாம் படித்தது பாராயணஞ் செய்ததும் கந்தபுராணச் சுருக்கமேயாம். அக்காலத்துத் தமிழ்ப் பண்டிதர்களுக்குத் தமிழ்வசனநடை நன்கு எழுதவாராது. இது 60, 70 வருடங்களுக்கு முன்னர் வெளியான தமிழ் நூல்களாலும் உரைகளாலும் அறியலாம். நாவலர் வசனமே பின்வந்தவர்களுக்கும் அவர் சமகாலத்தவருக்கும் வழிகாட்டியாயிருந்ததென்று கூறலாம்.

இப்பெரியார் புரிந்த சிவதொண்டும் தமிழ்த்தொண்டும் அழியாப் பண்பை உடையனவாதலால், அவருக்குப் பின்வந்த பலர் பாடசாலைகள் அச்சுக்கூடங்கள் தாபிக்கவும் புத்தகங்கள் வெளியிடவும், பிரசங்கங்கள் செய்யவும் முற்பட்டனர். இப்போது இங்கு நிலவும் நூற்றுக்கணக்கான சைவ பாடசாலைகளும் நாவலர் பெருமானது சிவதொண்டின் இறப்பின்மையை யாவர்க்கும் உணர்த்தி நிற்கின்றன.

இந்தியாவிலே தமிழ்ப்புலவர்களின் சரித்திரங்கள் சுருக்கமாக அவ்வப்போது S.S.L.C. முதலிய பரீக்ஷைகளுக்குப் பாடமாக ஏற்படுத்தப்படுகின்றன. உதாரணமாகக் காலஞ்சென்ற நமச்சிவாய முதலியார் சரித்திரம் இவ்வருடத்து S.S.L.C. பரீக்ஷைக்குப் பாடமாக வந்துளது. இதேபோல நாவலர் சரித்திரச்சுருக்கமும் இலங்கைப்பரீக்ஷைப்பாடங்களிலொன்றுகச் சேர்க்கப்பட்டால் நலமாகுமே. இதை நீங்கள் கவனிக்கவேண்டும்.

நாவலரின் புகழைப்பற்றி இன்னும் எடுத்துரைப்பதென்றால் முடியாதாதலால் இம்மட்டோடு நிறுத்தலானேன்.

“சொல்லுவ தறியேன் வாழி” என்பது திருவாசகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாபதி சிவாசாரியர்

[கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் திரு. அருள். தியாகராசா அவர்கள் 5-5-44 இல் வானொலியில் பேசியது]

எமது தென்றமிழ் நாட்டில் சைவ சித்தாந்தப் பேரொளியை நாட்டியவர்கள் முக்கியமாக மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதியார் முதலிய நால்வராவர். உமாபதி சிவாசாரியார், சோழநாட்டின்கண் ஒப்பில்லாத தில்லைத்திருத்தலத்தில் தில்லைவாழந்தணர் திருமரபில் திருஅவதாரம் செய்தருளினர். இவர் மிக்க இளமையிலேயே தமிழ் இலக்கண இலக்கியங்களையும், பன்னிரு திருமுறைகளையும் வடமொழியில் வியாகரணம், வேதாகமம் முதலிய கலைகளையும் நன்கு பயின்று அவைகளில் மிக்க வல்லுநராயினர். ஒரு நாள் இவர் நடராஜப் பெருமானைத் தரிசனம் செய்துவிட்டு, மிக்க விருதுகளுடன் சிவிகையிலேறி வீதியிற் செல்லும்பொழுது, அவரை ஆட்கொள்ளக் கருதிய மறைஞான சம்பந்தர் "பட்ட கட்டையிற் பகற்குருடேகுதல் பாரீர்" என்று கூறினார். உடனே உமாபதி சிவாசாரியார் அந்தச் சிவிகையினின்றும் இழிந்து அவரை வணங்கி ஆட்கொள்ளும்படி வேண்டிநின்றார். பின் ஒரு நாள் இவரது பரிபாகம் அறிய மறைஞான சம்பந்தர், நெசவாளர் வசிக்கும் வீதிக்குச் சென்று, அவர்கள் நெசவு செய்யும் பொழுது இடும் கூழைத் தமது கையில் ஏற்றுண்டார். அப்பொழுது உமாபதியார் அவரது கையினின்றும் ஒழுகிய கூழை ஏந்தி உண்டார். மறைஞான சம்பந்தர் இவரது பரிபாகத்தை அறிந்து மகிழ்ந்து, தமக்கு ஞானாசிரியரால் அறிவுறுத்தப்பட்ட சிவஞானபோதம், சிவஞான சித்தியார் என்னும் இருநூல்களையும் உபதேசித்தனர்.

உமாபதியாரின் பக்குவ நிலையை அறியமாட்டாத தில்லைவாழந்தணர்கள், அவர் தமது வருணாச்சிரம தருமத்தினின்று தவறினர் என்று இகழ்ந்து அவரைச் சாதிப் பிரஷ்டம் செய்தனர். அதனால் அவர் கொற்றவன் குடிக்குச் சென்று அங்கே வசித்தனர். இப்படியிருக்கையில் தில்லைக் கூத்தப்பிரானை உமாபதி பூசிக்க வேண்டிய முறை நாள் வந்தது. அவர் பூசிப்பதற்காகத் தில்லைக்குச் சென்றார். தில்லைவாழந்தணர்கள் அவரைப் பூசை செய்ய வொட்டாமல் தடுத்தபடியால், அவர் மனவருத்தத்துடன் கொற்றவன் குடிக்குச் சென்று கூத்தப் பெருமானை மனத்தினால் தியானித்து நிட்டையில் அமர்ந்திருந்தார். தடுத்த அந்தணர் திருக்கோயிலடைந்து திருக்கதவம் நீக்கிப் பூசைப் பெட்டகத்தைத் திறக்கப் பெட்டகம் காணுதலாயிற்று திகைத்து வருந்துகையில், பொன்னம்பலவர் அசரீரியாக "நாம் கொற்றவன் குடியில் உமாபதியின்பால் ஆடாநிற்கின்றோம்" என்று அருளிச் செய்தார். அதுகேட்ட அந்தணர் அனைவரும் மனம் நொந்து, உமாபதியாரைப் பணிந்து அழைத்து வந்து பூசனை புரிவித்தனர்.

இப்படி இருக்கையில், பூர்வம் செய்த பாபவசத்தினால் ஓர் புலையர் குலத்திற் பிறந்து பெற்றான் சாம்பான் என்னும் பெயருடையவராய் இருந்தார், முற்பவ விசேடத்தால் கூத்தப்பெருமான் திருவருளைப் பெறுவதற்காக நாடோறும் விறகு வெட்டிக்கொண்டு போய்த் திருக்கோயில் திருமடைப்பள்ளிக்கு அன்புடன் கொடுத்து வந்தார். அவரது பரிபாகத்தை அறிந்த கூத்தப்பெருமான் ஒரு நாள் அவரது கனவில் தோன்றி "அடியார்க்(கு) எளியன்சிற் றம்பலவன் கொற்றங் குடியார்க்(கு) எழுதிய கைச்சீட்டு - படியின்மிசைப் பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து முத்தி கொடுக்க முறை" என்று எழுதப்பெற்ற திருமுகப் பாசுரத்தை அவருக்கு அளித்து, இதனை "உமாபதியின்பால் கொடுப்பாயாக" என்று கூறி மறைந்தருளினர். பெற்றான் சாம்பான் விழித்தெழுந்து இறைவனுடைய பெருங்கருணைத் திறத்தை நினைந்து உருகி, திருமுகப் பாசுரத்தைச் சிரமேற்கொண்டு அதனைப் பத்திரப்படுத்திக் கொற்றவன் குடிக்கு வந்தான். அப்படி மடத்தில் விறகுவெட்டித் தரும் திருப்பணி செய்து வரும் நாட்களில் ஒருநாள், மழையால் பெற்றான் சாம்பான் வரத் தாமதித்ததால் திருவமுதுவேளை தாமதிக்க, உமாபதியார் காரணம் கேட்க அந்தணர்கள் மடைப்பள்ளிக்கு நாடோறும் ஒருவர் விறகு கொண்டு வந்து தருவர்! அவர் இன்றைக்கு வாராததனால் தாமதித்தது என்றனர். அதனைக் கேட்ட உமாபதியார் நாளை அவ்வடியாரை நம்மிடம் கூட்டி வருக என்றனர். அவ்வாறே பெற்றான் சாம்பான் மறுநாள் இரண்டு நாள் விறகும் கொண்டுவரக் கண்டோர், உமாபதியாரிடம் கூற உமாபதியார் பெற்றானை அழைத்து நீர் யாரென, பெற்றான் இறைவன் தந்த திருமுகத்தை வைத்துத் தொழலும், அத்திருமுகத்தை உமாபதியார் எடுத்துச் சிரத்தில் வைத்துத் திருநயனங்களில் ஒற்றி, ஆணையை எண்ணி நினைந்துருகி, பெற்றான் சாம்பானுக்குச் சத்திய நிர்வாணம் எனும் தீக்கை செய்தருள, அவர் திருவருட் சோதியிற்கலந்து முத்தி நிலையை அடைந்தனர்.

இவ்வுண்மையை அறியமாட்டாத சாம்பனின் உறவினர்கள், அரசனிடம் சென்று உமாபதியார் தங்கள் பெற்றான் சாம்பானைத் தீயிலிட்டுக் கொளுத்திவிட்டார், என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அரசன் உமாபதியாரை அழைத்து வினவலும், உமாபதியார் சத்திய நிர்வாண தீக்கையின் இயல்பை அரசனுக்கு விளங்க உரைத்தருளினார். அரசன் தான் காணும்படி மற்றொருவருக்கு அத்தீக்கை புரிந்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தான். சுவாமிகள் பக்கத்திலிருந்தவர்களைப் பார்க்க அவர்களுள் ஒருவரும் பரிபக்குவமுடையவராகக் காணப்படவில்லை. பூசை மடத்துக்குப் பக்கத்தில் நின்ற முள்ளிச் செடி இறைவனுக்கு திருமஞ்சனம் செய்த புண்ணிய நீரால் வளர்ந்து, அடியவர்கட்குத் தனது காய் கனிகளையுதவும் பெரும்புண்ணியம் கைகூடப்பெற்றதும் பரிபக்குவமுற்றிருத்தலைக் கண்டு அந்த முள்ளிச் செடிக்குச் சுவாமிகளால் சத்தியநிர்வாண தீக்கை செய்யப்பெற்றது. அந்தச்செடி உடனே திருவருட் சோதியிற் கலந்து அருவுருவடைந்தது. அரசன் அதனைக்கண்டு அதிசயித்துச் சுவாமிகளைப் பாராட்டிப் போயினன். உமாபதியார் தம்பால் வந்தடைந்த அருணமச்சிவாயருக்கு அநுக்கிரகஞ் செய்து சிவஞானபோதம் சிவஞான சித்தியார் என்னும் இருநூல்களையும் அறிவுறுத்துச் சிவானந்த நிட்டையில் அமர்ந்தருளினர்.

சிலநாட் கழிந்த பின், தில்லைப் பொன்னம்பலவாணரின் கொடியேற்று விழாவுக்காகச் சுவாமிகள் எழுந்தருளினார். தில்லை வேதியர்கள் பழையபடி செற்றங்கொண்டு சுவாமிகளை வரவொட்டாது தடுத்தபடியால் சுவாமிகள் வெளியில் எழுந்தருளியிருந்தார். தில்லை வேதியர்கள் கொடியேற்றுதல் செய்யத் தொடங்கினர்கள். கொடியானது மரத்தில் ஏறவில்லை. அதனால் வேதியர்கள் அச்சமும் ஆச்சரியமும் உற்று, சுவாமிகள்பால் சென்று வணங்கி, "தேவரீர் அடியேங்கள் செய்த அபராதத்தைப் பொறுத்தருளிக் கோயிலினுள் எழுந்தருளிக் கொடியை ஏற்றியருள வேண்டும்" என்று குறையிரந்தனர். சுவாமிகள் திருக்கோயிலினுட் சென்று "ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்" என்னும் பாசுர முதல நான்கு பாசுரங்கள் அடங்கிய 'கொடிக்கவியை'த் திருவாய் மலர்ந்து கொடியை ஏறும்படி செய்தருளினர்.

சிவாசாரியார் அணிவிழா முடிந்த பின், கொற்றவன் குடிக்கு எழுந்தருளிச் சிவஞான சித்தியாருக்குப் புடை நூலாகச் சிவப்பிரகாசம் என்னும் நூலையும், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் நூல்களையும் அருளிச் செய்தார். சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் எட்டு நூல்களும் சித்தாந்த அஷ்டகம் என்று அறிஞர்களால் வழங்கப்படும். அன்றியும் வடமொழியிலுள்ள பௌட்கரம் என்னும் சிறந்த உபாகமத்துக்கு அம்மொழியிற் பவிருத்தியுரையும் செய்தருளினர். அதன் பின்னர் செந்தமிழ், திருப்பதிகக்கோவை, திருமுறைகண்ட புராணம், திருத்தொண்டர் புராணசாரம், தெய்வச் சேக்கிழார் புராணம் என்னும் நூல்களையும், கோயிற்புராணம் என்னும் சிறந்த அரும் பெரும் நூலையும் இயற்றியருளினர்.

கோயிற் புராணத்தின் உயர்வை உலகுக்கு உணர்த்தத் திருவுளங்கொண்ட மன்றில் நடம்புரி அம்பலவாணர், ஒருநாள் தமது திருவுருவத்தை மறைத்தருளினார். இதனைக் கண்ட தில்லைவாழந்தணர்கள் மனங்கலங்கி மிகவும் திகைப்புற்றனர். அப்பொழுது எம்பெருமான் அசரீரியாக "நாம் உமாபதி பேடகத்திலிருக்கின்றோம்" என அருள் செய்தார். உடனே அவ்வந்தணர்கள் சிவாசாரியர்பால் சென்று நிகழ்ந்த வரலாற்றை விண்ணப்பஞ் செய்தார்கள். சுவாமிகள் பேடகத்தைத் திறப்பித்து "கோயிற் புராணம்" எனவும் அதனை வெளிப்படுத்தவே இறைவன் இவ்வண்ணம் செய்தனன்போலும் என்று கூறினார். வேதியர் மனமகிழ்ந்து சுவாமிகளையும், கோயிற் புராணத்தையும் சிவிகையிலேற்றித் தங்கள் தோள்களாற் சுமந்துகொண்டுவந்து தில்லைத் தலத்தை வந்தடைந்தார்கள். அம்பலவாணரும் தமது திருவுருவத்தைக் காட்டியருளினர். கோயிற்புராணம் விதிப்படி திருச்சிற்றம்பலவர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. ஆசாரிய சுவாமிகள் சிலநாள் அங்கே தங்கியிருந்து, நடராஜப் பெருமானின் ஆனந்தக் கூத்தினைக் கண்டு பேரின்ப வெள்ளத்தில் திளைத்து, சித்திரைத் திங்கள் அத்த நக்ஷத்திரத்தன்று சிவநிலை எய்தினர். இந்நாள் அந்நன்னாளாகும். இவர் காலம் சாலிவாகனசகம் 1235 ஆகும். அதிகப் 13ம் பக்கம், மேலும் சரித்திரத்தின் விரிவைச் "சந்தானாசாரியர் புராணம்" தனிற் காண்க.

இவர் அருளிச்செய்த பதிஞான நூல்களாகிய எட்டுச் சித்தாந்த நூல்களுள் சிவப்பிரகாசம், திருவருட்பயன் என்னும் இருநூல்களும் மிகச் சிறந்தவைகள்.

'சிவப்பிரகாச'த்தில் ஆசிரியர் அவையடக்கச் செய்யுளில்

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றிய நூல் எனும் எவையும்
தீதாகா துணிந்த
நன்மையினோர் நலங்கொள் மணி
பொதியும் அதன் களங்கம்
நவையாகா தென உண்மை
நயந்திடுவர்..."

என்று கூறியிருத்தலை நாம் உற்று நோக்குதல் வேண்டும். இது அவருடைய அகன்ற மனப்பான்மையையும் முற்போக்கையும் காட்டுகின்றது. இந்நூலிற்குச் (1) 'சிந்தனையுரை' (2) மதுரைச் சிவப்பிரகாசர் உரை (3) காஞ்சிபுரம் பிள்ளையார் பாளயம், இலக்கணம் சிதம்பரநாத முனிவர் உரை என மூன்று பழைய உரைகள் உண்டு. கொழும்பு மாநகரில் சைவ சிகாமணியகத் திகழ்ந்து சிவபதமெய்திய பெரியாராகிய திரு. மு. திருவிளங்கம் அவர்கள் ஓர் நல்ல உரை இயற்றியிருக்கின்றார்கள். சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துவட்டுக்கோட்டையிலிருக்குங் கல்லூரியில் போதகாசிரியராயிருந்த "கோசிங்கரென" (Rev H. R. Hoisington என்னும் அமெரிக்க பாதிரியார் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டுள்ளார்.

சிவஞானபோதம், சிவஞான சித்தியென்னும் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரும், சைவசித்தாந்தத்துக்காகப் பெரிதும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

வேதாள உலகம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னைச் சுகுணவிலாச சபையாரே இதனைக் கொழும்பில் நடித்துக் காட்டினர். அன்று ஏற்பட்ட விசேஷ சம்பவமொன்றை நாடகாசிரியரவர்கள் "நாடகமேடையில நேர்ச்சிபெறுவ தெப்படி" என்ற தலைப்பின்கீழ் ஆனந்தபோதினி 19-ம் தொகுதி 447-ம் பக்கத்தில் விபரித்துள்ளார்கள். அதனை ஈண்டு சுருக்கித் தருதும்.

"நாடகதினங்களில் அதிக உணவு புசியாதிருப்பது மிகவும் நன்று. இராத்திரி நாடகமாயிருந்தால் ஆறு மணிக்குள்ளாகப் போஜனத்தை முடித்துவிடவேண்டும். இதுதான் இந்த நாற்பது வருடங்களாக நான் அனுசரிக்கும் வழக்கம். இத்தவிதியைத் தவறி ஒருமுறை நடந்தபொழுது நானும் எனது சபை நண்பர்களும் பட்டகஷ்டத்தை இங்கு எழுதுகிறேன். ஒருமுறை (1916-ம் ஆண்டு) எங்கள் சபை கொழும்பிற்குப் போயிருந்தபொழுது ஒருநாள் அங்கிருக்கும் ஸ்ரீமத் திருநாவுக்கரசு முதலியார் எங்கள் சபை அங்கத்தினர் எல்லோருக்கும் பகலில் விருந்தளித்தனர். அவ்விருந்து மிகவும் பலமானதாயிருந்தது என்று சொல்லவேண்டியதில்லை. மூக்குப் பிடிக்க விருந்துண்டோம் நாங்கள். அன்றிரவு "வேதாள உலகம்" என்னும் நாடகம் ஆடவேண்டியிருந்தது. அதில் ஒரு காட்சியில் வேதாளங்களெல்லாம் தத்தம் சூட்சியால் வயிறு நிரம்பப் புசித்துவிட்டு தட்டி நடக்கவேண்டிய காட்சியில் நடிப்பதற்கு வாஸ்தவமாகவே எங்கள் நடிகர்கள் அப்படியே நடந்தனர். அது சபையோர்க்குச் சிரிப்பை விளைத்தது மட்டுமன்றி உண்மையை அறிந்த மேடைமீதிருந்த மற்றைய நடிகர்களுக்குச் சிரிப்பை விளைத்தது. நானும் எனது உயிர் நண்பராகிய ரங்கவடிவேலுவுங்கூட உண்ட விருந்தின் பயனாகச் சரியாகப் பாடி ஆடமுடியாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு கஷ்டப்பட்டோம். அச்சம்பவத்தை என் இளைய நண்பர்கள் கவனித்து நாடகம் ஆடும் தினம் எவரும் விருந்து போஜனம் உட்கொள்ளாதிருப்பார்களாக."

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ்நாடும் தமிழ் இசையும்"

வ. இ. சங்கீதசபையின் ஆதரவில் பிரம்மஸ்ரீ. கோமதி சங்கர ஐயர் பேச்சு

சென்ற சனிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் வட இலங்கைச் சங்கீதசபையின் ஆதரவில் ஒரு பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது.

வடபெரும்பாகவித்தியாதரிசி திரு. V. K. நாதன் அவர்கள் தலைமை வகிக்க, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வீணை வித்வான். பிரம்மஸ்ரீ கோமதி சங்கர ஐயரவர்களால் "தமிழ் நாடும் தமிழ் இசையும்" என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அவரோடு அண்ணாமலைச் சர்வ கலாசாலைப் 'பிடில்' ஆசிரியர் திரு. L. R. நீலமேகம்பிள்ளையும் உடன் சமூகமாயிருந்தார். இவர்களிருவரும் வட இலங்கைச் சங்கீதசபையாரால் நடத்தப்படும் "லேனிற காலச் சங்கீத பாடசாலை" மாணவ மாணவிகளைப் பரீக்ஷித்துத் தராதலப் பத்திரம் வழங்குதற்காக மேற்படி சபையாரின் வேண்டுகோளுக்கிணங்கி அண்ணாமலைச் சர்வ கலாசாலையாரால் அனுப்பிவைக்கப் பட்டவர்களாவர்.

அன்று பிரசாரகரை அறிமுகப்படுத்துமுகமாகப் பேசியபோது, திரு. V. K. நாதனவர்கள் யாழ்ப்பாணத்திற்கும் சங்கீதத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும், அதன் பெயரே யாழ்நாடு என்பதாகும் என்றும் கூறி, வட இலங்கைச் சங்கீத சபையின் வரலாற்றை எடுத்து விரித்துக் கூறினார். அன்றியும், ஊர்கள்தோறும் சங்கீதப்பாடசாலைகளை ஆரம்பித்துக் குறித்த ஒரு பாடத் திட்டத்துக்கமைய அங்கு சங்கீத பாடங்கள் படிப்பிக்கப்பெற்று, அங்கு கற்கும் மாணவ மாணவிகளின் தேர்ச்சி கணிக்கப்படுதல் வேண்டுமென்றும், அன்று அங்கு சமூகஞ் செய்திருக்கும் பிரசாரகரும் அவர் தோழரும் சங்கீதக் கல்விக்கு மிகுந்த ஊக்கங் கொடுக்கக் கூடியவர்களென்றும், அவர்களை இங்கு அனுப்பிவைத்த அண்ணாமலைச் சர்வ கலாசாலையாருக்குத் தாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்களென்றும் கூறி முடித்தார்.

அதன்பின், பிரமஸ்ரீ கோமதி சங்கர ஐயர் "தமிழ்நாடும் தமிழ் இசையும்" என்னும் விஷயமாக ஆராய்ச்சியோடு கூடிய ஓர் அழகான சொற்பொழிவு நிகழ்த்தினர். தாம் சொல்லும் கூற்றுகளை விளக்குதற்கும் உறுதிப்படுத்தற்குமாக அவர் இடையிடையே பாடியும் காட்டினர். அவர் பேசியவற்றின் சாரம் வருமாறு:

இன்று உங்கள் மத்தியில் நின்று பேசுதற்கு எனக்குச் சந்தர்ப்பம் தந்தமைக்காக உங்களுக்கு நான் நன்றி பாராட்ட வேண்டியவனாக இருக்கின்றேன்.

கர்நாடக சங்கீதம் தமிழ் நாட்டுக்கே உரியது. எந்தக் கலையும் தமிழ் நாட்டில்தான் வளர்ச்சியுற்றது. ஏனெனில், தமிழ் நாட்டிலேயே ஆலயங்கள் மிக அதிகமாக ஏற்பட்டு அவற்றை வளர்த்து வந்தன. வடநாட்டில் அத்தனை அதிகமாக ஆலயங்களு மில்லை. இவ்வாறு கலைகள் ஆலயங்களில் வளர்க்கப்பட்டதுமில்லை. (1) நாகசுரம், (2) சித்திரம், (4) சிற்பம், (4) நாட்டியம், (5) கவி அல்லது கதாகாலக்ஷேபங்கள் ஆகிய அனைத்துக் கலைகள் ஆலயங்கள் மூலம் வளர்ச்சி யடையவில்லையோ?

கர்நாடக சங்கீதமே உயர்ந்தது. அழகானது. இதை நான் வெறும் அபிமானத்தினால் மாத்திரம் சொல்லவில்லை. அது வளைவானது. ஒரு புள்ளைக் குழலிற் கிழ்லை பிறக்கும் துளையிலிருந்தே மேல்லவும் பிறக்கின்றது. அதற்கு ஒலியில் ஒரு வட்டம் ஏற்படுகிறதல்லவா? இப்படி அழகான - வளைவான - வேண்டிய வேலைப்பாடுகளோடு அமைந்த எம் சங்கீதம் அழகும் உயர்வும் வாய்ந்தது என்பதில் ஆக்ஷேபனையுமுண்டோ?

இராகங்களும் இராகங்களுக்கு லக்ஷணங்களும் எங்கள் கர்நாடக சங்கீதத்திற் சிறப்பாகக் கூறப் பெற்றிருக்கின்றன. இங்ஙன மெல்லாமிருக்கவும் தமிழிலே என்ன இருக்கிறது என்று சிலர் தமிழ்ச்சங்கீதத்தைப் பரிகசித்தார்கள். எனவே, தமிழிசை இயக்கம் ஆரம்பித்தது. ராஜா சேர். அண்ணாமலை செட்டியார் அவர்களின் ஆதரவால் இவ்வியக்கம் வளர்ச்சியுற்று வருகின்றது. இது புது இயக்க மென்று நீங்கள் கருதிவிட வேண்டாம். தேவார திருவாசகங்களைத் தந்த பெரியோர்கள், அருணாசலக் கவிராயர், நீலகண்டசிவன், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம்பிள்ளை ஆகியோர் எமக்கு இனிய சாகித்தியங்களைத் தரவில்லையா? இவற்றை யெல்லாம் நாம் மலினமடைய - இறந்துபட - விட்டு வெறும் தெலுங்குக் கீர்த்தனங்களைத் தான் படிக்க வேண்டுமா? இவற்றைச் சுரப்படுத்திப் படிக்கும் போது இவை என்ன அழகாகஇருக்கின்றன! தமிழில் இராகபாவமில்லை என்போர் இப்பாட்டுக்களைப் படித்த பின் தலைகுனிய மாட்டார்களா? சுத்த சீமந்தனி என்ற இராகத்திற் பாடுதற்குரியதாகச் செய்யப்பட்டதென்று சொல்லப்படும் 'ஜானகி' எனத் தொடங்கும் தெலுங்குக் கீர்த்தனையைப் படித்துப்பார்த்தால் அங்கு அந்த ராகம் பேசவில்லையே. அசாவேரியல்லவோ பேசுகின்றது. (இதைப் பிரசாரகர் படித்துக்காட்டினர்) தமிழ்ச் சாஹித்தியங்கள் அப்படியான சாகித்தியங்களா? இல்லையே; தேவாரங்களை எடுத்துக் கொள்வோமாயின், அவை குறித்த இராகத்தை எடுக்கும்போதே தெளிவாகக் காட்டி, பின் முடியுமளவும் அவ்விராகம் பிசகாமல் நிறைக்கச்செய்யும் சிறந்த சாகித்தியங்களாக இருக்கின்றனவே. உதாரணமாகப் 'பித்தா பிறைசூடி' என்னும் பண்ணைப் படித்துப்பாருங்கள். தேவாரங்கள் இனமேல் கர்நாடக சங்கீதமே அழிந்து விடும் என்றுகூடக் கூறலாம். இப்போ நம் சிறந்த தமிழ்ச் சாகித்தியங்களை அமைக்கக் கூடியவர்கள் பலர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். திருவனந்தபுரம் இலட்சுமணபிள்ளை அவர்களில் ஒருவர். அவர் பாடிய பாட்டொன்று எவ்வளவு அழகாக இருக்கின்றது பாருங்கள்! ('எதற்காயிவ்வுடலெடுத்தோம்' எனத் தொடங்கும் பாட்டைப் பிரசாரகர் பாடிக்காட்டினர்.) குழந்தைகள் கைதட்டும் போதே, காலெடுத்து வைத்து நடக்கும்போதே லயம் ஏற்பட்டுவிடுகிறது; ஆதலால் குழந்தைகளுக்குச் சிறுவயதிலிருந்தே சங்கீதத்தை நாம் கற்பிக்க வேண்டும்; சிறந்த ஆசிரியர்களைக்கொண்டு கற்பிக்க வேண்டும்."

(மேலும் பிரசாரகர் காரியதரிசியாகிய திரு S. R. கனகசபையவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பிரபந்த வகைகளில் தாம் செய்த சில புது வேலைகளை எடுத்து விளக்கினர். அதுகாலை 1 காட்டைக் 2 கௌளை, 3 ஆபி 4 வராளி 5 ஸ்ரீ ஆகிய ராகங்களை கன பஞ்சகம் எனப்படும். மேலும் ஆலயங்களில் அவை படிக்கத்தக்க காலங்கள் முதலியவற்றையும் பிரசாரகர் எடுத்து விரித்து விளக்கினர்.)

திரு: J. R. நீலமேகம்பிள்ளையும் சில குறிப்புரைகள் கூறினர்.

திரு: த; குமாரசுவாமிப்பிள்ளை நன்றியுரை கூறினர். தலைவர் தமது முடிவுரையின் கண்ணே, பிரமஸ்ரீ கோமதி சங்கரஐயரவர்களால் இன்றுமாலை 7 மணிக்குச் சுண்டிக்குளி செயின்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஒரு சங்கீதக்கச்சேரி நடத்தப்படுமெனத் தெரிவித்தார், அன்றியும், பிரசாரகருக்கும் திரு. நீலமேகம்பிள்ளையவர்களுக்கும் சங்கத்தின் சார்பாகத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

சென்னைமாகாணத் தமிழ்ப் புலவர் மகாநாடு

பண்டிதமணி கதிரேசச் செட்டியார் சொற்பொழிவு

வாலாஜாபாத் மே 6—

3—5—44ல் வாலாஜாபாத்தில் நடைபெற்ற தமிழ்ப் புலவர் மகாநாட்டில் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் தலைமைவகித்துப் பேசியதன் சாராம்சமாவது:-

இம்மகாநாடு கூடுதற்கேற்ற இடமாக இவ்வாலாஜாபாத் நகரத்தில் நடைபெறும் இந்துமத பாடசாலையாகிய இக்குருகுலத்தைக் கண்டது மிகப் பொருத்தமே. தக்க அறிவு படைத்த மாணவரை நல்லாசிரியர் தம் வீட்டில் வைத்து உடல் நலத்திற்கு வேண்டிய உணவு முதலியன கொடுத்து ஒழுக்க நெறியோடு கல்வியைக் கற்பிப்பதே பண்டைக் குருகுல நோக்கமாகும். அம்முறையிற் பயின்ற மாணவரே எதிர்காலத்தில் அறிவுலகத்தில் சிறந்த பெருமையடைந்து உலகில் புகழ்சிறந்து உறுதுணையாக விளங்குவரென்பது முன்னை வரலாற்று முறையில் அறிந்தது. கல்வியைத் தொடங்கும் மாணவர் உடல் நலத்தைப் பேணிக்கொள்ளுதலும் ஒழுக்கநெறியில் தலைப்படுதலும் இன்றியமையாதனவெனக் கருதல் வேண்டும். இம்முறையில் அமையுங் கல்வி நிலையங்கள் இக்காலத்து மிக அருகிக் காணப்படுகின்றன. அவற்றுள் இவ்விந்துமதப் பாடசாலையே தலையாயது என்று கூறலாம். இங்கே பல நூறு மாணவர்கள் உணவு பெற்று உடல் நலத்துடன் கல்வி பெற்று வருகின்றனர். சிறந்த இவ்வறத்தைப் பொறுப்பாக ஏற்று நடத்திவரும் நண்பர் திரு. மாசிலாமணி முதலியாரின் இடையறாத உழைப்பு மிகப் பாராட்டத்தக்கது.

புலவன் யார்?

புலவர் என்னுஞ் சொற்கு உரிமை படைத்தல் மக்களுக்கு அரிய தொன்றாகும். இற்றை நாளில் இச்சொல்லுரிமை மிக எளிதாகக் கருதப்பட்டு வருகின்றது. பொய்யாமொழியார் என்னும் புலவர் பெருமானை நோக்கி அவர் புலமையைப் பாராட்டி நீவிர் நல்ல புலவீர் என்று பாண்டிய மன்னர் கூறினராக, அதுகேட்ட புலவர் மணி நமக்கு அச்சொல் தக்கதாகாதெனப் பணிவுடன் கூறிய பாடல் பின்வருவது:— அருமுறைத்தானும் புலவனே முப்பாலின் திறமுரைத்தானும் புலவனே குறுமுனிதானும் புலவனே தண்டமிழ் மாறுக்கென்மே யானும் புலவனேனல. ஆதலால் திருவள்ளுவருக்குப் பின்னைப் புலவர் என்னுஞ் சொற்கு உரிமைபடைத்தாரைக் காண்டல் அரிதென்று அவர் கருதினரென்பது போதரும். கிடைத்தற்கரிய இப்புலமைபெற்றிற்குரிய தகுதியைப் படைத்துக்கொள்ளுதற்கு அழுத்தமான கல்வியும் பரந்த நோக்கமும் சிறந்த சீலமும் இன்றியமையாதன. உயிரினுஞ் சிறந்த ஒழுக்கத்தைப் பறக்கணித்து விட்டு ஓரளவு பெரும் பொருள் அமைதியடைதலும் ஆக்கலவிப்பட்டதைக் கொண்டு பொருள் பெறுதற்குரிய நெறியை ஆராய்தலும் சிறந்தன ஆகா. கல்வியை அறிவு வளர்ச்சிக்கும் இலக்கியம், சுவை நுகர்ச்சிக்கும் சிறந்த கருவியாகக் கருதல் வேண்டும். சுவை நுகர்ச்சி இல்லாத படிப்பு வாழ்க்கை இன்பத்திற்கு உரியதாகாது என்பதைக் கடைப்பிடித்தல் வேண்டும். போலி நிலையிற் புலமை பெற்றுப் பண்டிதராயினாரைக் கருத்தில் வைத்து மேற்கோட்டுப்பட்டம் பெற்றார் சிலர், பண்டிதரெனும் இச்சொல்லை இழிந்த பொருளுடையதாகக் கொண்டு சிறந்த புலமைச் செல்வம் உடையோரையும் இழித்துப் பேசத் தலைப்படுகின்றனர். பண்டிதத் தமிழ் என்றால் மிகக் கடினமென்றும் விளக்கமற்றதென்றும் கூறுதல் அத்துறையிற் பயிலாதவர் கூற்றாகும். மொழி நூல்களில் செய்யுள் நடையாயினும் உரை நடையாயினும் எளிமையும் இனிமையும் வேண்டப்படுவனவே. எளிமையையும் இனிமையையும் ஆராய்ந்து துணிவோர் மொழிப்பயிற்சி உடையோராய் இருத்தல் அவசியமாகும். பிழை உடையனவற்றை எளிமை எனக் கொண்டு விரும்புதல் தவறாகும். மேலும் ஆழ்ந்து கற்பவருக்கு அரிய நடையும் ஓரளவு வேண்டத்தக்கதே. அரிய நடை பொருள் நலத்தைச் சேர்ந்து சொல்லளவில் இருப்பது விரும்பத்தகாதது என்று.

பண்டிதரைப் பேணுங்கள்

சொல்லளவில் எளிமையும் பொருளளவில் அருமையும் அமைதல் அறிவுக்குச் சிறந்து வேண்டப்படுவது. பண்டிதர் என்று இழித்துக் கூறுதலை விட்டுப் பண்டிதர் முன்னேற வேண்டிய நெறியை அறிவுப் பரப்புடைய அறிஞர் கூறுவாராயின், அது பயன் விளைப்பதாகும்.

வேறோர் அளவு புலமையையும் பண்டிதரிடத்தன்றி வேறு யாரிடத்துக் காணலாம்? அவரைப் புறக்கணித்தால் தமிழ்நலம் பேணப்பட்டதாகாது என்பது என் கருத்து. மிக அரிதிற் பெறத்தக்க புலமைச் செல்வம் உடையாருக்கு நம் ஆதரவு பல்லாற்றானும் இருத்தல் வேண்டும்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

பரணிப் பிரபந்தம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

"உபய மெனும்பிறப் பாளருள்ளிட்
டுரைத்த வுயிர்க ளத்தனையும்
அபய மெனப்புகத் தஞ்சலென்ற
அபயன் ருளினை வாழ்த்தினவே"

என்றற்றொடக்கத்துத் தாழிசைகளை (தாழிசை 90) நோக்கிக்கண்டு கொள்க. தக்கயாகப் பரணியிலோ கூழை அட்டுண்ட பேய்கள் பாட்டுடைத்தலைவனை வாழ்த்துதற்குப் பதிலாக, அந்நூலை ஆக்குவித்த இராசராச சோழனையும் அவன் முன்னோர்களையும் வாழ்த்தின வென்று ஒட்டக்கூத்தர் கூறுகின்றார்.

தாராக வண்டந் தொடுத்தணிந்தார்
தமக்கிடம் போதத் தமனியத்தால்
சிராச ராசச் சோழன் சமைத்த
||தெய்வப் பெருமாளை
வாழ்த்தினவே

(|| தெய்வப் பெருமாள் - முதல இராசராசசோழ தேவர்) என்பது முதலாக அவர் பாடியுள்ள தாழிசைகளை (தாழிசை ௬௬) நோக்குக.

இனி, களங்காட்டுதலில், காளி பேய்களுக்குக் களங்காட்டியதாகக் கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. தக்கயாகப்பரணியோ, கதைத்தொடர்பு புலப்படத் தேவிக்குச் சிவபெருமான் களங் காட்டியதாகக் கூறுகின்றது.

என்றித்தகைய வேறுபாடுகளை நாம் இவ்விரு நூல்களுக்குமிடையே காணக்கிடக்கின்றது. இன்னும் வேறுபாடுகளுளவேற் கண்டு கொள்க.

சிங்களத் தமிழ்

[அ. லி. ம.]

இலங்கையின் மேல் கரையில இரு சிறுபட்டினங்கள் உள. ஒன்று பாதம்பை. மற்றது மாரவில். இவற்றிற்கிடையே பெரிய குளம் (மகாவெவ) என்றொரு கிராமம். இக்கிராமத்திற்கும் நேரே மேற்கே கடற்கரை ஓரத்தில் இருக்கும் மட்டக்கொட்டு என்னும் சிறு கிராமத்திற்கும் அதிக தொடர்பு உண்டு. முன்னையதில் குடியிருப்பவர் பெரும்பாலும் சிங்களவர். பின்னையதில் குடியிருப்பவர் பெரும்பாலும் தமிழர். இவர்களும் வக்கேதறு குடியினர்தாம். யாவரும் கடற்றொழிலாளரே. தெப்பம், பாதை, தோணி என்பன இவர்களுக்குக் கடலோட்ட உதவும் சிறு உருக்கள்.

இங்குள்ள விழுகிழவிக்குச் சிங்களம் விளங்காது: தமிழ்தான் வீட்டுப்பாஷை. அவளுடைய பேரப்பிள்ளை பள்ளியில் கற்பது சிங்களம்! ஏனெனில், தமிழ் கற்பிப்பதில்லை. பிள்ளை வீடு வந்தவுடன் தமிழ் பேசுவானாயினும் சிறுசில சிங்களச்சொல் கலந்தே பேசுவன். அவை பாட்டிக்கும் கால்கறியல விளங்கும். அவளும் அவற்றைத் தமிழென ஏற்று வழங்குவள். பாட்டியுடன் பேசினால் முதல் முதல் விளங்காது. இரு மொழியும் கைவருமானால் விரைவில் விளங்கலும். "தோப, வரச்சே, பாவகாட்டல், அசகுக காரியம், அடிகளியா, எக்க பன போன்ற சொற்கள் வழங்கிவரும்.

பாட்டியைப் பாட்டில் உற்சாகப்படுத்திவிட்டால அவள் பாடியும் விடுவாள். உதாரணமாக ஒருபாட்டு வருமா:- "வாழைக்காயும் சிறந்ததோர் கத்தரிக்காயும் பூசினிக்காயும் ஆசாவட்ட கண்ட வத்தனை பஞ்சுக்காவும அறக்சண வந்ன மக்க ஆகலே!"

இதனுள் முதற்பாகம் தமிழ், பிற்பாகம் சிங்களம். இப்படிப் பல பாக்களை மிக அழகுறப் படிப்பாள பாட்டி. பாட்டியின் பாக்களைச் சேகரிக்கவும் இக்கிராமங்களில பேனமேலும் தமிழை விருத்தி செய்யத் தொண்டாற்றவும் தமிழன்பர் பலர் முன்வரல் வேண்டும். இனறேல், இப்பாகங்களில தூய தமிழ் அறமும் போகுமெனப் பயப்பட இடமுண்டு.

விபரணவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 196ம், 197ம் இலக்க இன்சோல்வன்சி வழக்கில் பிறப்பித்த கட்டளைப்படி பின்வரும் ஆதனங்கள் 1944ம்ஆ வைகாசி மாசம் 20ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வக் காணிகளுக்குள்ளே நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணைமேற்கிறை, பள்ளுவிலித்தோட்டம், நி. பா. 6½, வீடும்,கிணறும், செய்பயிர் வான்பயிரும், இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு றோட்டு, மேற்கு கதிரேசு முத்துக்குமாரு பெண் காமாட்சியின் ஆதனம். இதிற் சொரியலாய் அரைவாசி.

(2) ஷை இறை திருவளர் திடலும் சீமாதிடல், நெ. பா. 8. வீடும், வான் செய்பயிர்களும், எல்லைகிழக்கு கணபதிப்பிள்ளை துரையப்பாவின் ஆதனம், வடக்கு சண்முகம் கைமபெண் தங்கமுத்துவும் மறுபேரும், மேற்கு ஒழுங்கை, தெற்கு கணபதியார் விசுவலிங்கமும் பெண்ணும். இதிற் சொரியலாய் அரைவாசி.

(3) ஷை இறை பள்ளுவிலி தோட்டம், நெ. பா. 5. வீடும்,வான்செய்பயிர்களும், எல்லை தெற்கு விசுவலிங்கத்தினுதனம், வடக்கு நல்லதம்பிக்கும் மறுபேருக்கும், கிழக்கு எம். சி. தண்டாயுதபாணிக்கும் மறுபேருக்கும், மேற்கு ஒழுங்கை. இவையனைத்தும்.

(4) ஷை இறை பிராயடி, நி. பா. 1⅛ கிணறும், வான்செய் பயிர்களும், எல்லை கிழக்கு சுலுத்தான் பெண் நெயினும்மாவுடைய ஆதனம், வடக்கு பக்கீர் அப்துல்காதர் சாகுல் கமீதுக்கும் பங்காளருக்கும், மேற்கு ஒழுங்கை, தெற்கு றோட்டு. இவையனைத்தும்.

M. K. சங்கரப்பிள்ளை,
அசைனி.

18, 1ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 20-4-44.
(Mis. 28. 11—15-5-44)

சென்னை மாகாணத் தமிழ்ப்புலவர் மகாநாடு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பல ஆண்டுகள் கல்லூரிகளிற் பயின்று ஆங்கில மொழியால் அடையும் அறிவில் திருந்திய தமிழ்ப் புலமையுடையார் அறிவு எதனுள்ளும் குறைந்ததாகாது. அங்ஙனமாகவும் சிறப்பு முறையிலும் ஊதிய முறையிலும் பட்டதாரிகளுக்குக் குறைந்தநிலையில் வைத்துத் தமிழ்ப் புலவரைக் காண்பது தமிழ்மொழியையே இழித்துக் காண்பதுபோலாகும். மேல்நாட்டு மொழியில் ஈடுபட்டு நம் மொழிநலத்தை மறந்து புறக்கணித்து வந்த நிலை இற்றைப்பொழுது மாறுதலடைந்து வருகின்றது. இஃது ஒருவகையில் எம்மனோர்க்கு ஆறுதல் அளிப்பதாகும். பல்கலைக் கழகத் தலைமை ஆட்சியாளர்கள் கீழ்நாட்டுக் கலைப் புலமைக்குச் செல்வாக்கு உண்டாகுதற் கருத்துடையவராக இருத்தல மகிழ்ச்சி தருகின்றது. அவர்கள் இன்னுஞ் சிறந்த நிலைக்குப் புலவரைக் கொண்டு வருவதற்கேற்ப புலமையாளரும் பல துறைகளில் முன்னேற்ற மடைய வேண்டும். வேற்று மொழியாளர் கலைத்திறங்களையும் அன்னார் நாகரிகத்துறைகளையும மொழிபெயர்ப்பு முதலிய நூல்களால் அறிந்து கொள்ளுதலில் விருப்பமுடையாராதல் வேண்டும்: நமமொழியில் அகலப் படிப்பதிலும் ஆழப்படித்தல நன்றாகும். ஊன்றி உணர்ந்து கலை நலத்தை அனுபவித்துப் பயிலுவதே புலமையின் சிறந்த குறிக்கோளாக இருத்தல வேண்டும். போலி நிலையிற பல கற்பதிலும் அழுந்திய நிலையிற் சில கற்பது சிறந்ததாகும். கலவியைக் கண்ணெனக்கூறிய வள்ளுவர் ஒழுக்கத்தை உயிரினுஞ் சிறந்ததாகக் கூறியுள்ளார். ஆதலின், புலமைச் செல்வமுடையாருக்கு ஒழுக்கநெறி இன்றியமையாததாகும். கல்வி ஒழுக்கம் என்னும் இவற்றின்மேலும சிறந்த தொன்றுண்டு. அது கடவுட் கொள்கையாகும்.

உயிர்த் தொகுதிகளாகிய நம்மனோர் ஆற்றலினும் மிகச்சிறந்த போாற்றலுடைய கடவுள் ஒருவர் உண்டெனக் கொண்டு அக்கடவுள் சான்றாக நம்மனமொழி மெய்களைத் தூய்மைப்படுத்த முயல வேண்டும். கடவுட் கொள்கையை அறவே ஒழித்து மக்கள் நலம்பெறுதல் எக்காலத்திலும் எவ்விடத்தும் இயலாததொன்று, தமிழ் மக்களிடையே இற்றைஞான்று காணப்படும் வேற்றுமைகள் எல்லாம் ஒழிதல நன்றாகும். மொழி, சமயம் முதலிய கொள்கைகளிற் சிற்சில வேற்றுமைகள் இருப்பது மக்களுக்கு இயற்கையாகும். ஆயினும், அதுபற்றி ஒருவரோடு ஒருவர் இகலுதலும் குறைகூறுதலும் தமிழர் முன்னேற்றத்திற்குத் தடையாகுமென்பதை அறிய வேண்டும்.

ஒற்றுமையாலுண்டாகும் வன்மை வேறுபடுதலால் நெகிழ்ந்து குறைந்துவிடும் என்னும் கருத்துத் தமிழ் மக்களிடை வேரூன்றி நிலைபெற்றுத் தமிழர் வாழ்க்கை நலம் பெறுதல் அரிதாக முடியும். மேலும் நம்மவர் மொழி சமயம் முதலியவற்றில எதிர்ப்புக் காணும் மக்களுடைய செல்வாக்கிற்கும் நம் ஒற்றுமைக் குறைவு ஆக்கந்தரும என்பதையும் நினைவு கூரல் வேண்டும்.

உமாபதி சிவாசாரியர்

4ம் பக்கத் தொடர்ச்சி

உழைத்தவரும், சென்னையில் சில காலமாக நடந்துவந்த "சித்தாந்த தீபிகை" (Siddhantha Dipika) என்னும் சைவ ஆங்கில மாத வெளியீட்டிற்கு ஆசிரியராயுமிருந்த பெரியாராகிய ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் "திருவருட்பயனை" ஆங்கிலத்தில மொழிபெயர்த்துள்ளார்கள். இலங்கையில் சைவசித்தாந்தம் நன்கு கற்ற பெரியாரும், அதனைவண்ணம ஒழுகுபவருமாகிய திருவாளர் சு. சிவபாதசுந்தரம B. A. அவர்கள் இந்நூலுக்குச் சிறந்த உரையொன்று தமிழில எழுதியுள்ளார்.

உமாபதி சிவாசாரியர் முதன் மாணாக்கர் அருணமச்சிவாயதேவர். அவர் திருவாவடுதுறைப் பிரசித்தர் சைவப்பிரகாசர்க்கு ஞானோபதேசஞ் செய்தார். அவர் மூலமே பிறநில வேளாளகுல நிலைநாயக பிரம சாரியத்திற் றலைநின்ற நமச்சிவாய மூர்த்திகளுக்கு உபதேசித்தார். இவரே திருவாவடுதுறை ஆதீனத்தை நிலைநாட்டினவர். சிவாசாரியரவர்கள் திருக்குறள் வெண்பா வொன்றைத் தாமியற்றிய 'நெஞ்சுவிடுதூது' எடுத்தாண்டிருக்கிறார்கள். அது வருமாறு.

"…………தேருங்கால
உண்மையறிவு உறவிலை என்னுமது
தன்னை அறிவை தனி அறிவை—
முன்னர்
"தலைப்பட்டார் தீரத் துறந்தார்
மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று—
நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவ
ருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல
—ஐவர்க்கும்"

சமரச வேதாந்த சித்தாந்தத்தை இவ்வுலகில் நிலைநாட்ட வந்த, தாயுமானப் பெருந்தகையார் சிவாசாரியரவர்களை ஓர் அழகிய செய்யுளால பின்வருமாறு அறிந்து வணங்குகின்றார்.

"சிற்றம் பலமன்னுஞ் சின்மயராந்
தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநாள்
எந்நாளோ?"

உசன் சைவவாலிப சங்கப் பகிரங்க விழா

இவ்விழா 26 ந் தேதி (8-5-44) சித்திரைத் திங்கள் இரவு 8 மணியளவில் வழக்கறிஞர் திரு. ச. இராசரத்தினம் அவர்களின் தலைமையில் திரு. வி. சுப்பிரமணியம் அவர்களின் தேவார பாராயணத்துடன் உசன் சைவ வித்தியாசாலை மண்டபத்தி லாரம்பமாயது.

அத்தருணம் பண்டிதர். திரு. சி. பொன்னம்பலம் அவர்களால்'வீரசொர்க்கம்' என்னும் விஷயம் விரச்சுவை ததும்பப் பேசப்பட்டது. பின்னர், இசைத் தமிழறிஞர் திரு. தா. பொன்னம்பலம் அவர்கள் "கண்ணப்ப நாயனார்" என்னும் விஷயத்தைப் பக்கவாத்திய சகிதமாகக் கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். அத்துடன மேற்படி பேச்சாளர்களால் இசை விருந் தளிக்கப்பட்டது. அப்பால் மேற்படி சங்க அங்கத்தவருள் ஒருவராகிய திரு. பெ. செல்லத்துரை என்பவரால் நன்றியறிதல கூறப்பட்டுத் திரு. க. சரவணமுத்து என்பவரின் தேவாரமோதலுடன கூட்டம் இனிது நிறையது.

—நிருபர்.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

செவ்வாய் மே 16

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 ஆர் ருக்மிணி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 நாகர்கோயில் ஜே ஸாம்ராஸ் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சேலம் ஜி தேசிகன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2—05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 நாகர்கோயில் ஜே ஸாம்ராஜ் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 ஜீ ஜானகி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 விருந்தாளி நாடகம் 8 சேலம் ஜி. தேசிகன் பாட்டு 8-45 ஜி ஜானகி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இருவயலின்கள 10 ஆசைவேளை 10.30 முடிவு.

புதன் மே 17

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 கே சாம்பமூர்த்தி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் கே சுமதி பாட்டு 9முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கே சுமதி 2 தமிழில செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 பி கே விஸ்வநாத சர்மா வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 பி, கே, கலிபுல்லா பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 யப்பானை ஆராய்வோம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 எம் கே தியாகராஜபாகவதர் † எம் எஸ் சுப்புலட்சுமி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அமெரிக்க வாக்கு 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

வியாழன் மே 18

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 டி கே ரங்காச்சாரி இசைத்தட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எம் ஏ கிருஷ்ணமூர்த்தி ஐயர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் எஸ் கிருஷ்ண மூர்த்தி ஐயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 டி ரங்கம்மாள் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 ஆர் மீனும்பாள் வீணை 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கே. பி சுந்தராம்பாள் பாட்டு 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அரும்பொருள் சேமிப்பு 10 ஆசைவேளை 10-30 முடிவு.

தேகவியோகம்

தெல்லிப்பழையைச் சேர்ந்த வீமன்காமத்தில் வேளாண் மரபைச் சேர்ந்த இன்னாசித் தம்பியின் புதல்வரும் பிரபல வைத்தியராகிய ஜோண்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை யாக்கோபு என்பவரின் மருகரும், தற்போது இங்கு வைத்தியஞ் செயயும் வெலிச்சோர், அருளப்பு என்பவரின் தம்பியுமாகிய பிலிப்பு என்பவர் இந்த ஏப்பிரல் மாசம் 30—ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் 27-வது வயதில் தமக்குண்டான நோய் காரணமாகத் தேகவியோக மடைந்தார். இவரது பிரிவால் வருந்தும் இனசனருடன் நாமும் வருந்துகிறோம்.

—நிருபர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க;
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Monday, 15, May, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org